# மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் தாக்கம் என்ன?

## திட்டக் குழு அறிக்கை அளிக்க முதல்வர் உத்தரவு

**சென்னை, செப். 22:** மகளிர் உரிமைத் தொகை திட்டத்தால் விளைந்த சமூகத் தாக்கங்கள் குறித்து திட்டக்குழு அறிக்கை அளிக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார்.

மாநில திட்டக்குழுவின் நான்காவது கூட்டம் குழுவின் தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னை தலைமைச் செயலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அவர் பேசியதாவது:

தமிழக அரசு செல்ல வேண்டிய பாதை, செல்லும் பாதை சரியானது தானா என்பதையும் அறிவுறுத்தும் அமைப்பாக திட்டக்குழு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இதற்காக திட்டக் குழுவினருக்கு பாராட்டுகள். சில முக்கிய கொள்கைகளை வகுக்கும் பணி திட்டக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, மின் வாகனம், தொழில், துணி நூல், கைத்தறி, சுற்றுலா எனப் பல்வேறு துறைகளுக்கான தனித்த கொள்கைகளை தயாரித்து திட்டக் குழு அளித்துள்ளது. இதேபோன்று, கழிவு மேலாண்மை, நிலப் பயன்பாடு, நீர்வள ஆதாரம், வேலைவாய்ப்பு மற்றும் திறன், வீட்டுவசதி ஆகியவற்றுக்கான கொள்கைகளையும் விரைந்து இறுதி செய்ய வேண்டும்.

**திட்ட ஆய்வறிக்கைகள்:** திட்டக்குழு ஆய்வறிக்கைகளில் முக்கியமாகக் கருதுவது அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்த அறிக்கைகள்தான். இந்த அறிக்கைகள் வழியாக, அரசுத் திட்டங்கள் மக்களுக்கு எந்த அளவுக்கு பயன்களைத் தருகின்றன என்பதை அறிய முடிகிறது. குறிப்பாக, மகளிர் இலவச பயணத் திட்டத்தால், ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் ரூ.800 முதல் ரூ.1,200 வரை சேமிக்கிறார்கள் என்ற தகவல் கிடைக்கப் பெற்றது.



இல்லம் தேடிக் கல்வி, மக்களைத் தேடி மருத்துவம், நான் முதல்வன் போன்ற திட்டங்களால் மக்களுக்கு மிகப்பெரிய அளவில் பயன்கள் கிடைத்துள்ளன. இப்போது மகளிருக்கு ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை வழங்கி வருகிறோம்.

இது மகளிருக்கு எத்தகைய மகிழ்ச்சியை வழங்கி வருகிறது என்பதை அனைவரும் அறிவோம். மகளிர் உரிமைத் தொகை திட்டம் சமூகத்தில் ஏற்படுத்துகிற தாக்கங்களை ஆய்வுபூர்வமாக உறுதி செய்து திட்டக் குழு சார்பில் அறிக்கை அளிக்கலாம்.

**கள ஆய்வு வேண்டும்:** இந்தச் சூழலில், இரு முக்கிய வேண்டுகோள்களை திட்டக் குழுவினர் முன் வைக்கிறேன். தமிழக அரசின் கீழ், பொருளாதாரம் மற்றும் புள்ளியியல், மதிப்பீடு மற்றும் ஆய்வுத் துறைகள் செயல்பட்டு வருகின்றன. இந்தத் துறைகளை இணைத்துக் கொண்டு மாநில திட்டக்குழு செயல்பட வேண்டும். இந்த ஒருங்கிணைப்பு மிக அவசியம்.

திட்டக் குழு சார்பில் பல்வேறு ஆலோசனைகளும், கருத்துகளும் முன்வைக்கப்படுகின்றன. இவற்றை அரசுத் துறைகள் முழுமையாகவும் சரியாகவும் பயன்படுத்துகின்றனவா, பின்பற்றுகின்றனவா என்ற ஆய்வை மேற்கொள்ள வேண்டும். புள்ளி விவரங்களாக மட்டுமல்ல, கள ஆய்வுகள் மூலமாகவும் இதைச் செய்ய வேண்டும் என்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

இந்தக் கூட்டத்தில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மாநில திட்டக் குழு துணைத் தலைவர் ஜெ.ஜெயரஞ்சன், தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, முதல்வரின் செயலர் நா.முருகானந்தம், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலர் கே.கோபால், நிதித் துறைச் செயலர் (செலவினம்) எஸ்.நாகராஜன், மாநிலத் திட்டக் குழு உறுப்பினர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

### பயனாளிகளுக்கு முதல்வர் கடிதம்

மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகள் ஒரு கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கும் தனித்தனியே வாழ்த்து தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுதியுள்ள கடிதம் விரைவுத் தபாலில் அனுப்பப்பட்டு வருகிறது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது: தங்களது அன்புக் கட்டளையால், பேருந்தில் மகளிருக்கு கட்டணமில்லா பயணம், அரசுப் பள்ளியில் படித்து உயர்கல்வி பயிலக் கல்லூரிக்கு வரும் புதுமைப் பெண்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உதவித்தொகை, நகைக்கடன் ரத்து, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி ஆகியவை மகளிர் வாழ்க்கையில் மகத்தான மாற்றத்தை உருவாக்கியுள்ளன.

அந்த வரிசையில் மேலும் ஒரு மாபெரும் திட்டம்தான் 'மகளிர் உரிமைத் திட்டம்'. இந்தத் திட்டத்தின் பயனாளியாகத் தகுதியின் அடிப்படையில் தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்வதாக அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

# சந்திரயான்-3 லேண்டர், ரோவரை மீண்டும் தொடர்பு கொள்ளும் முயற்சிக்கு பலனில்லை

**இஸ்ரோ**

**பெங்களூரு, செப். 22:** 'சந்திரயான்-3' விண்கலத்தின் 'விக்ரம்' லேண்டர் மற்றும் 'பிரக்யான்' ரோவரை மீண்டும் தொடர்பு கொள்ளும் முயற்சிகள் பலனளிக்கவில்லை. எனினும், தொடர்பை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் தொடரும் என இஸ்ரோ தெரிவித்துள்ளது.

நிலவின் தென் துருவத்தில் ஆய்வு மேற்கொள்ள இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) அனுப்பிய 'சந்திரயான்-3' விண்கலத்தின் 'விக்ரம்' லேண்டர் திட்டமிட்டபடி கடந்த மாதம் 23-ஆம் தேதி நிலவில் தரையிறங்கியது. அதன்மூலம், நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கிய முதல் நாடு என்ற சரித்திர சாதனையை இந்தியா படைத்தது.

விக்ரம் லேண்டரிலிருந்து வெளியேறிய 'பிரக்யான்' ரோவர், நிலவின் பரப்பில் 100 மீட்டர் வரை சென்று ஆய்வுப் பணிகளை மேற்கொண்டது. நிலவில் கந்தகம், ஆக்சிஜன் உள்ளிட்டவை இருப்பது உறுதிபடுத்தப்பட்டது. விக்ரம் லேண்டரை 40 மீட்டர் வரை மேலெழுப்பி மீண்டும் தரையிறக்கும் சோதனையும் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது.


இந்நிலையில், விக்ரம் லேண்டர் மற்றும் பிரக்யான் ரோவரின் அனைத்து ஆய்வுப் பணிகளும் முடிவுற்றதாகவும், அதன் தகவல்கள் அனைத்தும் பூமியிலுள்ள கட்டுப்பாட்டு அறைக்கு பரிமாற்றம் செய்யப்பட்டதாகவும் இஸ்ரோ கடந்த 4-ஆம் தேதி அறிவித்தது. நிலவில் சூரியன் மறைவதையொட்டி அன்றைய நாளே, லேண்டர் மற்றும் ரோவர் 'ஸ்லீப்' மோடில் செலுத்தி செயல்பாடு நிறுத்தப்பட்டது.

நிலவில் மீண்டும் சூரியன் உதிக்கும் வெள்ளிக்கிழமையன்று (செப். 22) லேண்டர் மற்றும் ரோவரின் பேட்டரிக்கு தேவையான மின்சாரம் சூரிய ஒளி மூலம் கிடைக்கப் பெறும் என்பதால், அன்றைய நாளில் மீண்டும் தொடர்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக எதிர்பார்க்கப்பட்டது. அவ்வாறு தொடர்பை ஏற்படுத்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை என இஸ்ரோ தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இஸ்ரோ வெளியிட்ட எக்ஸ் (ட்விட்டர்) வலைதளப் பதிவில், 'சந்திரயான்-3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் மற்றும் பிரக்யான் ரோவரின் நிலை குறித்து அறிய, அதனுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், தற்போதுவரை எந்த சமிக்ஞையும் பெறவில்லை. தொடர்பை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் தொடரும்' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

நிலவில் தரையிறங்கிய நாளில் இருந்து சூரிய ஒளி இருக்கும் 14 நாள்களுக்கு செயலாற்ற மட்டுமே லேண்டர் மற்றும் ரோவர் வடிவமைக்கப்பட்டது.

சூரிய ஒளி அல்லாத 14 நாள்களைக் கடந்து, லேண்டர் மற்றும் ரோவர் மீண்டும் பணியாற்ற தொடங்கினால், அது சந்திரயான்-3 திட்டத்தின் கூடுதல் வெற்றி எனக் கருதப்படுகிறது.



# இன்றுமுதல் 19-ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள்

## 655 போட்டியாளர்களுடன் இந்தியா பங்கேற்பு

ஹாங்ஸோ, செப். 22: சீனாவின் ஹாங்ஸோ நகரில் 19-ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் சனிக்கிழமை (செப். 23) அதிகாரபூர்வமாகத் தொடங்குகின்றன.

**45** பங்கேற்பு நாடுகள், பிராந்தியங்கள்

**12,000** பங்கேற்பாளர்கள்

**40** விளையாட்டுகள்

**ரூ.11,000 கோடி** போட்டிக்கான செலவுத் தொகை

**61** பிரிவுகள்

**6** நகரங்கள் (ஹாங்ஸோ, ஹூஸோ, நிங்போ, ஷாக்ஸிங், ஜின்ஹுவா, வென்ஸோ)

**இ-ஸ்போர்ட்ஸ்** அறிமுக விளையாட்டு

## இரு அணிகளுடன் ஆப்கானிஸ்தான்

## இந்தியா...

## இந்தியா இதுவரை...

| ஆண்டு | இடம் | [illegible] | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2018 | ஜகார்த்தா | 8 | 16 | 24 | 30 | 70 |
| 2014 | இன்சியான் | 8 | 11 | 10 | 36 | 57 |
| 2010 | குவாங்சௌ | 6 | 14 | 17 | 34 | 65 |
| 2006 | தோஹா | 8 | 10 | 17 | 26 | 53 |
| 2002 | பூசான் | 7 | 11 | 12 | 13 | 36 |
| 1998 | பாங்காக் | 9 | 7 | 11 | 17 | 35 |
| 1994 | ஹிரோஷிமா | 8 | 4 | 3 | 16 | 23 |
| 1990 | பெய்ஜிங் | 11 | 1 | 8 | 14 | 23 |
| 1986 | சியோல் | 5 | 5 | 9 | 23 | 37 |
| 1982 | தில்லி | 5 | 13 | 19 | 25 | 57 |
| 1978 | பாங்காக் | 6 | 11 | 11 | 6 | 28 |
| 1974 | டெஹ்ரான் | 7 | 4 | 12 | 12 | 28 |
| 1970 | பாங்காக் | 5 | 6 | 9 | 10 | 25 |
| 1966 | பாங்காக் | 5 | 7 | 3 | 11 | 21 |
| 1962 | ஜகார்த்தா | 3 | 10 | 13 | 10 | 33 |
| 1958 | டோக்கியோ | 7 | 5 | 4 | 4 | 13 |
| 1954 | மணிலா | 5 | 5 | 4 | 8 | 17 |
| 1951 | தில்லி | 2 | 15 | 16 | 20 | 51 |